செய்தி வெளியீடு எண்:199 நாள்: 11.04.2017

# செய்தி வெளியீடு

## தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

தமிழகத்தின் நகர குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்த பல்வேறு வீட்டு வசதி, குடிசைப்பகுதி மேம்பாடு மற்றும் மறுகுடியமர்வு திட்டப்பணிகளை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் கடந்த 45 ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது. வாரியத்தின் பணிகள் முதலாவதாக சென்னை நகரில் செயல்படுத்தப்பட்டு பின்னர் தமிழகத்திலுள்ள இதர நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய களப்பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்புகள், மனை மேம்பாடு மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாடு, மறு வாழ்வு மற்றும் மறு குடியமர்வு, சிதலமடைந்த அடுக்குமாடி குடியிருப்புகளை மீண்டும் கட்டுதல், பொருளதாரத்தில் நலிவடைந்த மக்களின் குறிப்பாக பெண்கள் மற்றும் இளைஞர்களின் உயர்வினை உறுதி செய்ய வேலை வாய்ப்பு பயிற்சிகள் மற்றும் வாழ்வாதார பணிகள் போன்ற திட்டப்பணிகளை "ஏழையின் சிரிப்பில் இறைவனைக்காண்போம்" என்ற குறிக்கோளுடன் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக மத்திய மாநில அரசுகளின் பங்களிப்புடன் ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்பு திட்டம் , ராஜீவ் வீட்டு வசதி திட்டம், தொலை நோக்கு திட்டம் 2023–ன் கீழ் அனைவருக்கும் வீட்டு வசதி வழங்க வகை செய்யும் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம், சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டு வசதி மற்றும் மறுகுடியமர்வு திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டி வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது சென்னை மணலி புதுநகர், வியாசர்பாடி, காஞ்சிபுரம் மாவட்டம் ஒக்கியம் துரைப்பாக்கம், செம்மஞ்சேரி, பெரும்பாக்கம், மறைமலை நகர், திருவள்ளூர் மாவட்டம் அத்திப்பட்டு திட்டப்பகுதிகளில் பல்வேறு திட்டங்களின் கீழ் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டங்களில் பொருளதாரத்தில் மிகவும் நலிவடைந்த நிலையில் வீடுகளின்றி அரசு புறம்போக்கு நிலங்கள், ஆற்றங்கரையோரங்களில் ஆக்கிரமிப்பு செய்து குடிசைகள் அமைத்து வசிப்பவர்கள், திட்டபணிகளுக்காக தேர்வு செய்யப்படும் இடங்களில் ஆக்கிரமிப்பு செய்து வசிப்பவர்கள், பெரு வெள்ளம் மற்றும் இயற்கை சீற்றங்களினால் பாதிக்கப்படுபவர்கள், பொருளதாரத்தில் மிகவும் நலிவடைந்த பிரிவினர் போன்றவர்களுக்கு மாவட்ட நிர்வாகம், மாநகராட்சி, பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை போன்றவை மூலம் பரிந்துரைக்கப்படுகின்ற குடும்பங்களுக்கு மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு வழங்குகின்ற வகையில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டப்பகுதிகளில் குடியிருப்புகள் ஒதுக்கீடு பெற்று தருவதாக இடைத்தரகர்கள் பொதுமக்களிடமிருந்து பணம் வாங்கி ஏமாற்றி வருதாக பல்வேறு புகார்கள் வந்தவண்ணம் உள்ளன. எனவே தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தில் வீடுகள் பெற்று தருவதாக பணம் கேட்டு ஏமாற்றும் இடைத்தரகர்களை பொதுமக்கள் நம்பி ஏமாற வேண்டாம்.

எனவே, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தில் வீடுகள் பெற்று தருவதாக இடைத்தரகர்கள் யாரேனும் அணுகினால் பொதுமக்கள் அருகாமையிலுள்ள குடிசைப்பகுதி மாற்று வாரிய அலுவலங்களில் நேரில் சென்று உண்மை நிலையினைவிசாரித்து தெரிந்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**